

உ

ஸ்ரீ மாரியம்மன் துணை.

பூமண்டலத்தில் சிறந்த சோழமண்டலம்
மாயவரம் தாலூகா மேலப்பாதி யென்கிற
நகார்ச்சுன க்ஷேத்திரத்தின் கீழ்புரமிருக்கும்
உப்புச்சந்தை

# ஸ்ரீமஹாமாயி பேரில் பாடிய கீர்த்தனங்கள்.

முதல் பாகம்.

இவை

திருச்சி ஜில்லா மணப்பாறை
நாச்சாரம்மாளால்
பாடியது

தஞ்சை
ஸ்ரீ வித்தியாவிநோதினி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1914. [அணா 1½.

உ

ஸ்ரீ மாரியம்மன் துணை.

உப்புச்சந்தை

# ஸ்ரீ மஹாமாயி பேரில் பாடிய கீர்த்தனங்கள்.

## 1. விநாயகர் துதி.

கெஜத்தினொடுதோலைப்போத்தும் கெங்காதரர்க்குமைந்தா
அஜன் ஹரிதேவர்க்கெல்லாம் ஆதியாய்நின்றபூதா
ஸஜ்ஜனர்கள்போற்றுகின்ற ஸுந்தர திவ்யபாதா
கெஜமுகா உனைநானிப்போ கேட்டிடும்வரங்கள் தா தா.

## 2. ஸரஸ்வதி ஸ்தோத்திரம்.

விருத்தம்.

சதுர்முகர்தேவியாளே ஸரஸ்வதியே உன்திவ்ய
ஸாரஸமலர்பாதங்கள் ஸந்ததம்பணிந்தேனம்மா
ஸாரஸநேத்ரி உப்புச்சந்தையாள் மேல்துதிப்பேன்
ஸாரமாய்வந்துநீயும் சந்தோஷம் தருகுவாயே.

## 3. ஸரஸ்வதி துதி கீர்த்தனம்.

ராகம்-கமாஸ் தாளம்-ஏகதாளம்

பல்லவி.

தாயேநீவாருமம்மா
ஸரஸ்வதியே தாயேநீ வாருமம்மா.

அநுபல்லவி.

தாயேநீவாருமம்மா தயவுடன்பாருமம்மா
நீயேகெதிகாருமம்மா என்னாவில் தாயே.

சரணம்.

விக்னவிநாயகனை வேண்டியேநான்பணிந்தேன்
விக்னம் வாராமல்காக்க என்னாவினுள்ளே தாயே 1

அன்புள்ள வுப்புச்சந்தை அம்பிகை மீதில்பாட
நம்பிஉனைப்பணியுறேன் என்னாவினுள்ளே தாயே 2

ஏதும்தெரிந்திடாத பேதைநான் பாடுதற்கு
யாதும்பிழை வாராமலே நாவினிலே தாயே 3

## 4. ஸ்ரீமகமாயி துதி.

சீருள்ளநதியோரத்தில் ஸ்ரிங்காரமாய்விளங்கும்
ஸ்ரீமஹமாயிஉந்தன் சீர்பாதம்பணிந்துகொண்டு
சீருடனுனைத்துதிக்க சிரியவள்மனதில்கொண்டேன்
சீர்செய்யவந்துநீயும் சீக்கிரம் அருள்செய்வாயே.

இதுவுமது.

வேதனைமிகவடைந்து வெதும்பிஎன்மனது நொந்தேன்
ஈதையும்போக்குதற்கு நாதரும் ஒருவுறற்று
ஏதுமோர்வகையிலாமல் என்மனம்தவித்து நின்று
பாதமேகதியதாக பற்றியென்தேவிதன்னை
ஆதரவாகக்கொண்டு அவளைநான் மிகத்துதித்து
ஓதுவேன்தெரிந்தமட்டும் உள்ளமதுருகினின்று
பேதையான் உரைப்பதெல்லாம் பெண்மதியானதாலே
ஈதைஎல்லோரும்கண்டு இகழாமலன்புகூர்வீர்.

5. (வேறு கீர்) (ருகம் நாதநாமகிரியை) ஆதிதாளம்

பல்லவி.

கொலுவமர்ந்ததைப்பாருங்கள் அம்பிகைதேவி
கொலுவமர்ந்ததைப் பாருங்கள்.

அனுபல்லவி.

கொலுவமர்ந்தாளிதோ லவணஸம்மோஹத்தி
விலவம்பஞ்ஜ—ப்பொதியில் கனவிட்டகெதிபோல
வலுவுள்ளபிணிகளை லகுவாகப்போக்குவள்
கலுஷங்கள்நீக்கிய கருணாகடாக்ஷீ—கொலு.

சரணம்.

எங்கும்பரிபூரணமாய் என்மாதை அவள்
தங்கநிறைந்திருப்பவள்
அங்கம்பதரிமனம் மங்கிவருவோர்களை
இங்குவாவென்றழைத்து பங்கமில்லாமல்சேர்த்து
மங்களவாத்தியம் முழங்கிடவேநல்ல மங்கள
வாரத்தில் அங்கனுமணியும்—கொலு. 1

காத்திரமாய் கண்விழித்து பக்தர்மேல்கிருபா
நேத்திரத்தாலேரக்ஷித்து ஆத்திரத்தோடுஜெனம்
காத்திருப்பாரென்று ஸூத்திரமாய்துன்பத்தை
பார்த்துப்பரக்கடித்து நேத்தியாய்பக்தர்தொழ
தேத்தித்து நித்திடவே காத்தவருயனுடன்
கருப்பண்ணனுடனே—கொலு. 2

ஸாரஸநேத்திரிமுன்பாக தித்தித்தாளம்
ஸ்ரீங்காரமேளங்கள்போடவே
நேரம்தவருமல் கர்பூரஹாரதிகள
நாரணிஎங்கும்பரி பூரணிஅண்டஜெக
காரணிஎங்களுட நாராயணன்ஸோதரி
ஸாரமுடன்காவேரியோரம் ஆலயத்தில்—கொலு 3

க்ஷீரபஞ்சாமிருதமும் சிரந்தயிள நீரும்திலதைலத்துடன்
வாரிஜநேத்ரி காவேரிஜலத்துடனே கோரியபிஷேகித்து
வாரிசந்தனம்வைத்து பாரிலுயர்ந்தநல்ல பாரியாடைதரித்து
நேரில்குங்குமங்களை வாரியர்ச்சிக்கவே—கொலு. 4

புஷ்பமாலைகள்பிரள வகைவகையாய் ஒப்பும்ஸரங்களசைய
வொப்பும்செந்தாழைகள் குப்பென்றுவாஸிக்க
இப்படிபஞ்கஜபுஷ்ப்பங்கள்சோபிக்க
செப்பியேஸ்தோத்திரங்கள் அப்போஜனம்துதிக்க
உப்புசந்தையில்நின்று ஸுப்பிரகாசமாய்—கொலு. 5

பக்குவமனதுடய பக்தர்மேலவள் மிக்கப்ரேமயுடையவள்
அர்க்கஉதயங்கள் அனேகமானதுவொரு மிக்கஉதித்ததுபோல்
தக்கப்ரகாசமாய் வொக்கஜெனங்கள் கைகுவிக்கவாயால்
துதிக்க சுக்குரவாரத்தில் மிக்கவொய்பாரமாய் —கொலு 6

தானவறைஸம்ஹரிப்பள் எங்கெங்குமுள்ள கானகத்திலும்
வஸிப்பள் தானவறைஜெயித்து வானவறைரக்ஷித்து
ஹீனமில்லாமல்சேர்த்து தானும்புகழ்படைத்து
பானுகோடிப்ரகாஸியானவளுலகத்தில்
பானுவாரத்தினிலே தீனரக்ஷகியும்—கொலு. 7

(ரா) ஆனந்த பைரவி (திருபுடை சாபு.)

கீர்த்தனங்கள்.

கொலுகீர்த்தனம்.

பல்லவி.

கொலுவீற்றிருக்கிறாள்பாரீர் அம்பிகைதேவி
கொலுவீற்றிருக்கிறாள்பாரீர்.

அனுபல்லவி.

கொலுவீற்றிருக்கிறாள்பார் கலுஷசம்ஹாரம்செய்ய
வலுவாகும்நோய்களெல்லாம் சுலபமாய்த்தள்ளுதற்கு—கொலு.

சரணம்.

ஆடையும்பட்டாடைஜொலிக்க மாரில்ப்பதக்கம்
ஹாரஸரங்களசையவே ஆடைபட்டாடைஜொலிக்க

ஹாரஸரங்கள்ஜொலிக்க அன்புடன்ஜெனம்நிறைக்க
ஆனந்தக்கண்ணிருதிர்க்க—கொலு. 1

பாரிவாத்தியங்களும்கூடவே தேவிமுன்போய்
சிரிங்காரமேளங்களும்போடவே
பாரிவாத்தியங்களுடன் ஸ்ரிங்காரமேளங்கள்முழங்க
பூரணகிருபைபுரியகாரணமாயிவ்விடத்தில்—கொலு. 2

சுக்குரவாரதினம்தன்னில் நம்தேவியிவள்
பக்குவஅவுஷதம்கைகொண்டு
சுக்குரவாரத்தினத்தில்பக்குவஅவுஷதம்கொண்டு தக்கிடதோ
மென்றுதான்முழக்கிவாத்தியங்கள்நடத்த—கொலு. 3

ஸ்ரீதரன்ஸஹோதரியிவள் அடுத்தவரை ஆதரித்தணைப்
பவளிவள் ஸ்ரீதரன்ஸோதரியிவள்ஆதரித்திடுவளிவள்
ஆதித்யவாரந்தனிலெபேதமற்றவரைக்கார்க்க—கொலு. 4

ஸௌந்தரிமேனிதுலங்கவே இந்தலவண சந்தையில்நின்று
விளங்கவே ஸௌந்தரிமேனிதுலங்கிசந்தையில்நின்றுவிளங்கி
மந்தஹாஸமாகதிவ்யமங்களவாரம்தனிலே—கொலு. 5

(வேறு.)

6. ஸ்ரீமஹாமாயி அன்னவாஹனத்தில் எழுந்தருளிய கீர்த்தனம்.

ராகம் ஸஹானா தாளம் மிஸ்ரசாபு.

பல்லவி.

அன்னைபராசக்தி அம்பிகை அழகிய அன்னவா ஹனம்
கொண்டாளே தானழகிய அன்னவா ஹனம்கொண்டாளே

அனுபல்லவி.

தன்னேரொருவரில்லா உன்னத வடிஉள்ளாள் தன்னைநம்பினவர்
மேல் நன்றாய் கிருபைவைப்பவள் அன்னம்போலொத்த
நடைகளும் பஞ்ச வர்ணக்கிளி போல்மொழிகளும் சின்னஞ்சிரிய
சிற்றடிகளும் பொருநன்னய மானயிடையுடன் என் (னன்னை)

சரணம்.

ஆடிசுக் குரவாரம் அர்தரு த்ரிவறையில் அனைவோர்களும்
கண்குளிர ஹம்ஸவா ஹனத்தின்மே லாரூஹ ணமாஹவே
ஆனந்த முடனெழுந்து அத்புத மாய்திவ்ய ஆடைநன் ருய்தரித்து
அழகிய கண்டஸரம் அனேக மாய்தரித்து அலர்ந்த
பூமலரிலங்கவே நல்ல ஆபரணங்கள் துலங்கவே ஆதிசக்தியும்
விளங்கவே தன் னன்பர் கள்மனங்களிக்கவே (அன்னை) 1

பேரிவாத்தியம்முழக்கம் ஆரவா ரத்துடனே பாரிவேட்டுகள்
சப்திக்க ஹாரபதக்கங்கள்கே யூரமசை ந்தாடவே

நீரஜதளநேத்ரியும் ஸாரமுடைய தோர்ஸ்ரிங்காரமேளங்கள்போட
சேரவேவருநம்பரீ வாரகெணங்கள்கூட கோரபாபவினாசினி
காவேரிதீரனிவாஸினி பாரபவபய மோசனிஎங்கள்
வீரசக்தி ப்ரகாசினி என் (னன்னே) 2

நாடிவீதியில்விளையாடிவருகவெண்ணி கூடிகுமாருடனே
கூடிமருமக்கள்மார் ஜோடிசேர்ந்துவரவே நாடிவேகமுடன்
(தேவி) வாடிபக்தஜெனங்கள் பாடியழைக்கதாவி தேடியிவர்மேல்
கிருபை நாடிவேகமாய்மேவி ஜாடையால் மலர்வாடையால்
ஜெனம் நாடவே கூட்டங்கூடவே கோடைமின்னல்க
ளென்னவே அம்மாள் ஆடையும்பளீரென்னவே (அன்). 3

ஆவணிமாஸத்தில் ஆதித்யவாரத்தில் ஆனந்த
முள்ளருத்திரியில் ஆகாசமார்க்கமா யன்னம்பரந்துவரும்
அழகைவந்துபாருங்கடி ஆரோஹணத்தைக்கண்டு
அனைவோர்களும்துதிக்க ஆனந்தபாஷ்பங்களமிதமுடனுதிர்க்க
ஆதியாய் பரஞ்ஜோதியாய் அநாதரக்ஷகநீதியாய் போதவேயருள்
கோதையாய் ஸ்ரீநாதனுடைய ஸோதரியாய் (அன்னை.) 4

அவனிதனிலுயர்ந்த லவணஸம்மோஹத்தில் ஸுகுணமுடனே
நின்றவள் லவணஸம்மோஹாம்பாளெனும்பேர் படைத்ததிவ்ய
லாவண்யஸுந்தரியாள் ஸுகுணமுடனிருக்கும் ஸுப்ரகாசனு
கிய ஸகுணமூர்த்தி கோவிந்தன் ஸஹோதரியாம்தேவி (அன்) 5

ககனமார்க்கமா எழும்பவே நல்லஸுஜனர்க்கானந்தம்
தழும்பவே ஸுகுணமாய் அன்னம்பரக்கவே தகதகென
தீபங்கள் நிர்க்கவே (அனனே) 6

(வேறு.)

ராகம் சுருட்டி தாளம்:—மிஸ்ரசாபு.

7. அன்னவாஹனம்கொண்டாளே மஹமாயிதேவி
அன்னவாஹனம்கொண்டாளே (அன்ன)

அனுபல்லவி.

அன்னவாஹனம் கொண்டாள் அன்னை மஹமாயி
தன்னிகரில்லா தெய்வத் தன்மையுடனேதேவி (அ)

சரணம்.

பூமியிலிவளைப்போல் புண்யதெய்வங்களை பூலோகத்
தார்கண்டதில்லையென்றோத புஷ்பஹாரங்களொன்றோ
டொன்று பிரண்டுமோத புதிதாய்நாகஸ்வரங்கள் பூரித்து
[மிகஊத (அன்) 1

கெந்தர்வ கின்னரர் அந்தரத்தினில்நின்று துந்துமி
வாத்தியம்மகிழ்ந்து முழக்க அந்தமுடனேதேவர் மந்தார
மலர்தூவ வந்தபக்தஜனங்கள் வந்தனமென்றுகூவ(அன்) 2

உத்தமி யிவளென்று உத்தமப்பேர்பெற்ருள் சத்தியரூபிஸ
வுந்தரிதேவி அத்தனை ஜெகத்தையும் பெத்தபூரணியிவள்
இத்தரை முழுவதும் சுத்திவ ருகவென்று (அன்) 3
ஹம்ஸத்தின்மீதில்வந் தமர்ந்தஉடனேஉற்று அன்பர்
கர்பூர ஹாரதிதறப்பெற்று அன்புடன்பக்தஜனர் ஆராதிக்க
வேபெற்றுஅதிசயமிதுவென்றுஅனைவோரும்பார்க்கஉற்று 4
பானுசுக்கிரவாரம் பாதிருத்ரிவரையில் ஆனந்தமாக ஹம்
ஸத்திலிருந்து மானைப்போல நீவநின்றுதானேஹொயிலாய்ச்
சென்று தீனரக்ஷிகிளன்று வானோர்புகழநின்று (அன்) 5

8. (வேறு) கீர்த்தனம் (ருகம்புன்னாகவராளி.)

ஓடாதே மனமேசவலைகொண்டு வாடாதேநினமே.

அனுபல்லவி.

ஓடாதேயினிஎங்கும் நாடாதேபாவங்களைதேடாதேதுஷ்டருடன்
கூடாதே இனிமேலே ஓடாதே.

சரணம்.

தேருதல்சொல்வதற்கு (யிவ்வுலகத்தில்) யாரிருக்கின்ருர்நமக்கு
பாரியோசனைசெய்து தேரிக்கொள்ளவேணும்தாம்
ஸாரமுள்ளகாவேரி யோரத்தாள் கிருபைசெய்வாள் (ஓடா) 1
வீண்பொழுதுநீபோக்காதே (யினிமேலேநீ)
வீண்கார்யங்களை நோக்காதே
நான்சொல்லுவது உனக்கு (தேன்போன்றமதிகண்டாய்)
சாண்வயத்துக்காக நீஏன்விசாரமடைந்தாய். (ஓடாதே) 2
எந்தத்துன்பம்வந்திட்டாலும் (மனதேஎன்னை) சிந்தைகலங்கச்
வந்தவினையைத்தீர்த்து (நொந்தவேளையில்காத்து [செய்யாதே
எந்தவிதமும் உப்புச்சந்தையாள் துணைசெய்வாள். (ஓடா) 3

வேறு

9. தேவியைப்பார்த்துசொல்லும் கீர்த்தனங்கள்.
ராகம் இந்துஸ்தானி காபி தாளம் ஏகதாளம்.

பல்லவி,

ஆசைகொண்டேனம்மா அமிதமாகயிப்போநான்.

அனுபல்லவி.

நேசமாக உன்னுடன் பேசவும்என்மனதில் (ஆசை)

சரணம்.

உந்தன்பக்தஜனங்களில் எந்தனைஒருளாக ஸொந்தமென்றுநீயெண்ணி
வந்திப்போவசனிக்க (ஆசை) 1

கருணாகரிஉன்னைக் கருதியேநான்வந்திட்டால் வரும்வேளை.
தனிலேநீ வாவென்றழைக்கவும்நா (ஆசை) 2

தொண்டரிலோருளாக க்கொண்டுஎன்னைநீவைத்து அண்டையில
வந்துநீயும் கண்டுபேசநான்மிக (ஆசை) 3

யேரெடுத்துநீபார்க்கும் நேரங்களில்யான்வந்து சீருடனுந்தனோடு
நேரில்நின்றுபாஷிக்க (ஆசை) 4

மோஹமாய்லவணசம மோஹத்தினுந்தனுடன் ஸ்ரீஹரி தங்கை
யேநான் தாஹமுடன்பேசிட (ஆசைகொ) 5

வேறு, பல்லவி.

ராகம் :—ஆனந்தபைரவி தாளம் :— திரிபுடை.

கருணையோடென்னைக்காக்க தருணமிதுநீபாராய்
சரணம்தந்தெனைக்காராய் (ஆசைகொண்டே)

அனுபல்லவி.

10. அருணகோடிப்ரகாஸி சரணமடைந்தோர்நேசி
மரணபயவினாசி மங்களாங்கிநீர்தோஷி

சரணம்.

கஷ்டம்கயிலென்னைநீ காட்டி கொடுத்தாயானால் துஷ்டமானிட
ரென்னை தூரிஏசுவார்கண்டாய் அஷ்டசக்தியும்நீயே யிஷ்டநாயகி
நீயே நஷ்டம்செய்யாதேதாயே கஷ்டம்தீர்த் தருள்வாயே 1

யாரும்திக்கில்லைபாரு போரும்என்குறைதீரு
காருண்யம்கொஞ்சம்சேரு கருணையாலென்னைப்பாரு
நேரேநல்வாக்கைக்கூறு கோரபவத்தைத்தீரு
நாராயணிநீகாரு ஸாரபதத்தில்சேரு 2

அவனிதனிலுயர்ந்த லவணஸம்மோஹம்நின்ற
ஸகுணமூர்திதங்கையே ஸகுணமுள்ளமங்கையே
அவனிதனிலேஎன்னை அவமானம்செய்தல்பின்னை
புவனம்தனிலேஉன்னை புகழாற்ஜனங்கள்சொன்னேன் 3

வேறு.

11. கீர்த்தனம் ராகம் :—சாரங்கநாடா ஆதிதாளம்.

பல்லவி.

ஸத்யம்ஸத்யம்மிதம்மாபாராய் நானுனைநம்பினதுஸத்யம்
ஸத்தியம்மிதம்மாபாராய்.

அனுபல்லவி.

ஸத்தியம்ஸத்யம்நானுன்னை நித்யமாய்நம்பினது பெத்தமா
தாவேஎன்மேல் சித்தம்வைத்துக்காருமம்மா (ஸத்)

சரணம்.

உற்றார்உறவுமெனக்குண்டோ உனைத்தவிர பெற்றார்பெருமை
எனக்குண்டோ கற்றகலைகளுண்டோ மேற்றபொருள்களுண்டோ
முற்றும்நீர்பார்த்திருந்தும் குற்றம்சொல்லநியாயமுண்டோ 1

உன்னைப்பிரிந்தநாளிலெல்லாம் உன்னைமறந்து உண்ணேனுறங்கே
னடிதாயே அன்னையேநானுனக்குஇன்னம்ஸத்தியமாக
என்னென்றுரைப்பேனடி என்னைநீமறவாதேடி (ஸத்) 2

பெற்றார்பிரந்தாரெனக்கில்லை அன்புடன்பேசும் சுற்றத்தார்க
ளுமெனக்கில்லை உற்றவர்களுமில்லை மற்றவர்களுமில்லை
உற்றார்பெற்றார்பிரந்தார் உனைத்தவிரவேறேயில்லை. (ஸத்) 3

தப்புகளேதுண்டெடன்மேலம்மா உண்டானாலதை செப்பிடு
வாய்திரந்துசும்மா அப்பன்காத்தமுத்துடன் உப்புசந்தை
யில்நின்று இப்படிநீயிருந்தால் எப்படிபிழைப்பேனம்மா (ஸத்) 4

உண்டு ஒருபாலகன்கண்டாய் அவனுனக்கு தொண்டனென்றென்
மனதில்கொண்டேன் மண்டலேச்வரியே உன்னண்டையில் [றது
தானழைத்து தொண்டனாகவேசெய்து கொண்டுரக்ஷிப்பாயென் 5

12. (வேறு) (கீர்த்தனம்) (ராகம் அடாணா தாளம் ஆதி.)

தருணம் தருணம் தருணம் உன்சரணம் தந்தெனைக்காத்து
கருணையுடன்ரக்ஷிக்க தருணம் தருணம் தருணம்.

(அனுபல்லவி.)

அருணன்போலஉயர்ந்து கருணைக்கடலாய்நின்று
சரணமென்ற எனக்கு தருணத்தில்வந்துகந்து
மரணபயத்தைக்கொன்று சரணாரவிந்தம்தந்து [மணி.
நாரணிபூரணி காரணி என்மனம் பூரணம்செய்திடவீரசிகா

(சரணம்.)

ஸாதுரக்ஷகியேஉன் பாதம்பணிந்தயென்னை காதலு
டனேக்கக்கருத்தில்லையோ வேதன்புகழ்ந்திடும் ஸ்ரீநாதனுக்க
திப்பிரிய ஸோதரிஎன்றெல்லோரும் சொல்லவில்லையோ
வாதைசெய்யாதேஎனை வேதைப்பொருக்கேனினி நீதியுடனே
நீயும் ஆதரித்திடுசொன்னேன் சூதருத்தெந்தனை அபேதமாக
நினைத்து போதுமேதுன்பம் வாதினிவேண்டாம் கோதயே என்
முன்னாதரவாய்வர (தரு) 1

உத்தமினென்று உனைகத்தியழைத்தாலும்நீ யித்தினைமோடிசெய்ய
யுக்தமோதான் மெத்தகிலேசமடைந்து சித்தங்கலங்கியானும்[தன்
பித்துகொண்டிருப்பது பெருமையோதான் பெத்தமாதாவேஉந்
சித்தம் கடினமாக வைத்துக்கொண்டது மிகஉத்தமமல்லபாரு
பத்தவதாரம்செய்த உத்தமர்தங்கையறே பக்திகொடுத்திடமுக்
தியளித்திட சக்தியேநீயும் இத்தரையில்வர (தரு) 2

உன்னைத்தவிர்த்தெனக்கு உலகத்தில்வேரேதெய்வம்அன்னியமாக
வேயானறியேனம்மா என்னை இனியாகிலும் பின்னமில்லாமல்
செய்துமன்னிக்காவிட்டாலிதுநன்னயமோ என்னதாமஸ
மென்தன்முன்னேநீவந்துநிர்க்க பன்னகவேணி சொன்னது
கேளு அன்னமுமேரி அன்னையிங்கேவரத் (தரு) 3

## 13. (ருகம் கல்யாணி) தாளம் திரிபுடை சாபு.

ஆனந்தம்தருவாயம்மா எந்தனுக்குந்தன் ஆனந்தம்தருவாயம்மா.

(அனுபல்லவி.)

ஆனந்தம்தருவாயுன் னன்பென்னுள்ளம்பதிய தானந்த
மன்றி ததும்பிக்கறைபுரளும் (ஆ)

சரணம்.

உந்தன் கிருபையால்பாரடி பார்த்துயிவ்வேளை வந்தவினை
யைத்தீரடி தொந்தகாலம் பாரடி இந்த துன்பம் தீரடி
அந்தமுடன் கூரடி எந்தனையும் காரடி (ஆ) 1

அபிஷேக திரவ்யம்கொண்டு உந்தனுக்கு யான் அற்பிதம்
செய்துபணிந்து ஆடையாபரணங்கள் ஹாரஸரங்க
ளுடன் அம்மா உன்மேல்தரித்து அர்ச்சித்துனை தியானிக்கும் 2

பச்சை பீதாம்பரத்தால் ஆடையுனக்கு பாவாடையுடன் ஜோடி
த்து குச்சுப்பதைக்கம் குலுங்கும் ஆபரணங்கள் உச்சிதமாய்ப்
பூட்டி இச்சையுடனே பார்க்க (ஆனந்தம்) 3

## 14. வேறு ருகம் சுருட்டி தாளம்.

தாயேநீயே தயைசெய்குவாயே தாயேநீயே தயைசெய்குவாயே
தாயே நீயே.

(அனுபல்லவி.)

ஆயி அழகி அகிலநாயகி ஆனந்தநாயகி போகீ ஸுகீ அசோகி(

சரணம்.

பெற்றதாயும்நீயே என்றுளப்பொழுதும் பேதைநம்பியும் வேதை
யாகுமோ உற்றதுணை வேறே உண்டோ. சொல்லம்மா
உரகவேணியே உந்தன் மனதில் யிரங்கி தாயே (நீயே) 1

15. (வேறு கீர்) (ருகம் சங்கராபரணம்) திருபுடை சாபுதாளம்.)

பல்லவி.

ஆதாரமாய் உன் பொற்பாதாரவிந்தத்தை அனுதினம் தந்தாளு
வாய்

அனுபல்லவி.

வேதன் புகழ்ந்திடும் ஸ்ரீ நாதன் ஸோதரியேநீ
காதலுடனெந்தன்மேல் கருணைசெய் திடுவாய்நீ
வாதுசெய்திட நீதியல்லயி தேது நீ செய்யும் சூது ஸரியில்லை
கோதையே யிப்போது என்னுடன் வாதுசெய்யத்தகாது சொன்
னேன் (ஆ)

மண்டலந்தினிலுன்னைப் போன்ற தெய்வங்களை
மண்ணிலிதுவரைநான் கண்டதில்லை அண்டையில்வந்து உன்னை
கண்டு பணிந்து பின்னும் உண்டோ சோகம்
யெனக்குண்டோ உந்தனோடுவாக்கு எண்டிசைபுகழ்கின்றநாயகி
அண்டரக்ஷிகி மண்டலேஸ்வரி சண்டைவந்திடும் நமக்கிருவருக்
கும் கொண்டு என்னை நீ கார்க்காவிட்டால் (ஆ) 1

ஹாரஸரங்கள் அழகிய மாலைகள் மாரில் புரளும் மகிழ்ச்சியோடு
நேராய் நான் வந்து நிற்க சீராய் நீ யெனைப்பார்க்க நேரவில்லை
உனக்கது நேரமாகுமெனக்கு
நீரஜநயனிவாரி ஜாக்ஷி நீ யாரும் நிகரற்ற வீரசக்தி நீ
பாரிலுயர்ந்திட கோரிக்கையும் தர கோரினே னெனக்காரும்
கெதியில்லை (ஆ) (2)

16. (வேறு) ருகம்:—காம்போதி தாளம் திருபுடைசாபு.

பல்லவி.

அம்மாநானுனைநம்பி அவதியடையலாமோ அடுக்குமோ உனக்கம்
மணி (அனு) எம்மைக்கார்த்திடுவென்று சும்மா நான் சொல்
லச்சொல்ல சும்மா நீயிருப்பது ஸம்மதமோ உனக்கு அம்மா

(சரணம்.)

பாலர்களுக்கு நல்ல பழத்தைக்காட்டி ஏமாற்றும் கோலம் போலவே
என்னோடு ஜாலம் செய்து நீ பேசி ஆலயம் வந்த என்னைப்
பாலனம் செய்யாமலே காலால்தள்ளினுயே என் காலமிதுவோ
தாயே அம்மா (1)

எல்லையில்வந்திருந்தும் இலவுகாத்திருந்தவோர் கிள்ளைபோ
லானேனே தாயே வல்லேஉனக்குதயை வெல்லவிலக்கினுயோ
கல்லோஉந்தன்மனது நல்லதோஉனக்கிது அம் (2)

அழகுடையகாவேரி ஆற்றங்கரையாளே நான் அலரியழுகும்கு
ரலை அரியாயோ ஆதரித்திடு என்னை ஆரும்திக்கில்லைபின்னை
அபயம் அபயம் எனக்கபயஸ்தம் தருவாயே (3)

17. (வேறு) ராகம்:—காம்போதி தாளம் திரிபுடைசாபு.

(சரணங்கள்.)

அன்னையோநானுனை அண்டிவந்தேனடி அன்னைகேளாய் இப்போ
என்னைக்கார்த்திடுவதாக் கென்னயோசனை எந்தனன்னை கேளா 1

எந்தன் துயரம்தீர்த்து எந்திக்கொண்டாயானுல் அன் நான்
உந்தனுக்குமிகத் தகுந்தபூஷணம் செய்வேன (ன்னை) 2

ஆபத்தைத்தீர்த்தென்னை ஆண்டுகொண்டாயானுல ன்னை உன
க்காபரணங்கள்செய் தலங்கரிப்பேனடி அன் 3

ருக்கொடி ஜடைகுச்சுரம்யமாக உனக்கு அன் நான்
சீக்கிரமாகவே செய்துவருவேனடி அன் 4

சந்திரஸூர்யப்ரபை ஸரியாய்ப்பட்டஞ்சூட்டியும் அன் நான்
முந்தியேசெய்திட்டு சிந்தைமகிழ்வேனடி அன் 5

முத்துமூக்குத்தி உன்முகத்துக்கோர்வையாகவே அ நல்ல
நத்துப்பில்லாக்குடன் வைத்துப்பார்க்கேனே என் னன் 6

காதில் குண்டலங்களும் கம்மல் முருவ லுடன் அ நான்
கட்டழகி உனக்கிட்டுப்பார்க்கேனேடி அ 7

காறை காசுமாலை கண்ட ஸரங்களுடன் அ உன்
மாரி பதக்கம் பூட்டி நேரில் காண்பேனடி அ 8

கையில் கேயூரம் கடககங்கணமும் அ நான்
மெய்யாக வேயிட ஐயமுண்டோ உனக் கன் 9

நாட்டில் புகழு கையில் மேட்டி மையாக என் அ நான்
பாட்டில் வளயல் செய்து பூட்டிப்பார்க்கேனே என் அ 10

பாதகம் போக்கியே சீதளமாக்கினலன்னே கேளாய் என்
மாதாவே உனக்கு நான் பீதாம்பரமுடுத்துவேன ன் 11

இடுக்கங்கள் தீர்த்தாலுன்னிடுப்புக்கிசைந்திட அ உன்
னிடையில் ஒட்டியாணம் யூணிடுவேன் பாரடி தாயே அ 12

ஸாதுரக்ஷகி என்னை காதலாய் பாரடி அ உன்
பாதத்திர்க்கிசைந்து நான் பாதஸரமிடுவேன் அ 13

எண்டிசை புகழ்பாதம் தண்டை சிலம்புடனன்னே அடி
அண்டரக்ஷகியே நான் கொண்டுவந்திடுவேண்டி அ 14

கெட்டிகொலுஸுடனே மெட்டிபீலிகளும் தானன் நான்
திட்டமாக உனக்கிட்டு ஸந்தோஷிப்பேனன்னே 15

கொஞ்சும் கிளிமொழி வஞ்சிக்காதேடி என்னே அ உனே
கெஞ்ஜிக்கேட்டினும் உன்னெஞ்ஜிரங்கவில்லையே அ 16

போருமம்மா துன்பம் போரும் பருமுகமன்னே கேளாய் நீ
தாருமம்மா யின்பம் பாருமம்மா கண்ணாலன்னே 17

18. (வேறு) (கீர்த்தனம்) ராகம் நீலாம்பரி தாளம் ஆதி.

(சரணங்கள்.)

அம்மையே அருளே உன்னை அடுத்தேன் காரடி தாயே
நன்மை தந்தெனைக் கார்ப்பாயே என்னம்மயே 1

செம்மையா என்னைக்கார்க்காமல் வன்மம் நினைந்திருப்பது
ஸம்மதமோ உனக்கிது என் 2

ஜெனமும் தனமும் கையில் கெனமும் விட்டுவிட்டேனே
ஜெனனீ உன்னை நம்பியே என் 3

கெனமோ உனக்கு இது எனை யாதரிப்பதர்க்கு
தனம் சிலவுண்டோ சொல்வாய் என் 4

பாபத்தினால் மிக யான் ஆபத்துக்குள்ளாகினேன்
தாபத்தைத் தீருமம்மா என் 5

நீ பெற்ற பாலர்மீதில் கோபிக்கவும் தகுமோ
சோபித்து நிர்ப்பாயம்மா என் 6

பந்தம் தனில்ச்சிக்கியான் நொந்துமனம் தளர்ந்தேன்
உந்தனை வந்தடுத்தேன் என் 7

எந்தன்துயரரிந்து உந்தன் கிருபையால்பார்த்து
வந்தவினை தீரம்மா என் 8

மங்கிமனம்தளர்ந்தேன் அங்கம்பதறிநொந்தேன்
பங்மிகவடைந்தேன் என் 9

எங்கெங்கும் தேடிஉன்னை இங்குவந்துகண்டேனே
மங்களம் நீதருவாய் என் 10

உற்றதுணையுமுண்டோ பெற்றவரெனக்குண்டோ
மற்றுமுள்ளவருண்டோ என் 11

சுற்றிச்சுற்றி வந்தாலுமற்ற தெய்வங்கள் காணேன்
சற்றேதயைசெய்யம்மா என் 12

தாயேதாயேஎன்றுன்னை ஓயாமலேயழைத்தேன்
வாயும்வலிக்குதம்மா என்ன 13

நாயிலும்கேடாஎன்னை பேயாப்பரக்கடித்தால்
நியாயமோ நீசொல்லடீ என் 14

தேவீதேவீஎன்றுன்னை கூவியழைத்துஎந்தன்
நாவும்வுலருதம்மா என் 15

பாவிஎனும்பேர்பெற்றேன் பாவித்துனைத்துதித்தேன்
ஆவிதவித்துநின்றேன் என் 16

மானமும்என்னுட அவமானமும் உனக்கிப்போநான்
தானம்செய்துவிட்டேனம்மா என் 17

ஆனபடியாலிப்போதென் மானங்கார்த்துரக்ஷிப்பாய்நீ
தீனதயாபரியன்னே என் 18

அண்டரக்ஷகினானுன்னை அண்டியும்கார்காமல்விட்டால்
கண்டவர்கார்ப்பாரோசொல்வாய் என் 19

குண்டலிதனை தரித்தாய் எண்டிசைபுகழ்படைத்தாய்
மண்டலேச்வரியல்லவோ என் 20

தான்பெற்றுவளர்த்திடும் கான்முளையைஅன்னைகள்
தான்விட்டுவிடுவாரோ என் 21

நான்படும்துயர்கண்டு என்தீர்க்காமலிருந்தாய்
தேன்மொழியேசொல்லம்மா என் 22

வாய்விட்டலருகின்ற சேய்களைக்கண்டும்பெற்ற
தாய்கள் ஸகிப்பார்களோ என் 23

தாய்குழந்தைகளை பேய்போல்பரக்கடிக்கும்
மாய்கைஎன்னசொல்லம்மா என் 24

ஸப்ரகாஸியேஉன்னை கல்பவிருக்ஷமென்றேனே
யெப்போதயைசெய்கின்றாய் என் 25

அப்பன்காத்தமுத்துடன் உப்புசந்தையில்நின்று
இப்பொபுகழ்பெற்றாயே என் 26

வேறு.

19. கீர்த்தனம் ராகம் மோஹனம் தாளம் ஆதி.

பல்லவி.

மோஹம்தந்தாயிதென்னடி மோஹனங்கிநீ
மோசம்செய்வாயோ சொல்லடி.

அனுபல்லவி

மோஹம்தந்தாயிதென்ன மோஹனங்கிஎனக்கு
ஆஹாரநித்ரையிலும் தாஹம்யிருக்கும்படி (மோஹம்.)

சரணம்.

எல்லையில்வந்திருந்து கல்லைஎண்ணுமஉன்னை
நல்லரிவாலேமிக நல்லதென்றேநினைத்து
சொல்லும்வார்த்தையைநம்பி பல்லைக்காட்டிக்கெஞ்சினான்
அல்லும்பகலும்உன்பேர் சொல்லியழைக்கும்படி (மோ) 1

உற்றதுணைநீஎன்று போற்றிசெய்துயான்னின்று
கற்றகருத்தைவிண்டு முற்றும்நம்பிக்கைகொண்டு
ஸொற்றும்பொருளிழந்து மற்றதைமரந்து
பெற்றமாதாவேஉன்னை சற்றும்மரவாதிருக்க (மோ) 2

காவேரிதீரத்தாளே ஆவிதவித்துயானும்
பாவிதுயரடைந்து பாவித்துனைநினைத்து
ஸேவித்துஉன்னைஎந்தன் ஜீவிஜோலஸ்மரித்து
தேவிதேவிஎன்றுன்னைக் கூவியழைக்கும்படி (மோ) 3

அப்பன்காத்தவராயன் செப்பியவாக்யங்களை
இப்போமறவேனடி தப்புண்டோநீகேளடி
வொப்பில்லாதரத்னமே வொப்பிஎந்தன்மனமே
உப்புசந்தையாளென்று எப்போதும்நான்னினைக்க (மோ) 4

மஹமாயிபேரில் பாடிய கீர்த்தனங்க்ள் முற்றிற்று.